# சென்னை சொசைட்டியின் முறைகேடுகளை கண்டித்து எழுச்சிமிகு தர்ணா..

தமிழ் மாநிலச் சங்கமும்,சென்னை தொலைபேசி மாநிலச் சங்கமும் இணைந்து சொசைட்டியில் நடைபெறும் முறைகேடுகளை கண்டித்து 28.06.2016 சென்னை பூக்கடை தொலைபேசி நிலைய வளாகத்தில் எழுச்சிமிகு தர்ணாவை நடத்தியது.

- **அநியாய வட்டியை உடனடியாக குறைக்க வேண்டும் (குறைந்தபட்சமாக 3%)**
- **வெள்ளானூர் நிலத்தை உறுப்பினர்களுக்கு உடனே பகிர்ந்து கொடுக்க வேண்டும்,**
- **விண்ணப்பித்தவருக்கு வரவு செலவு கணக்குகளை பார்வையிடவும் நகலை வழங்கவும் வேண்டும்,**
- **2014-15 டிவிடெண்டை 12% ஆக உயர்த்தி வழங்க வேண்டும்**
- **ஊதாரி செலவுகளை நிறுத்தவேண்டும்**

என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தர்ணா நடைபெற்றது. சொசைட்டியில் நடைபெறும் ஊதாரி செலவுகள் மற்றும் ஊழல்களால் பாதிக்கப்பட்ட உறுப்பினர்கள் கோபாவேசத்தோடு தர்ணாவில் கலந்து கொண்டனர். ஊழியர்கள் மத்தியில் அம்பலப்பட்டு விடுவோம் என பயந்துபோன NFTE சென்னை தொலைபேசி மாநிலச் செயலர் நமது தர்ணாவிற்கு தடைபோட நிர்வாகத்திடம் வலியுறுத்தினார். சென்னை தொலைபேசி மாநில நிர்வாகமும் நமது மாவட்ட/ மாநில செயலருக்கு தர்ணா போராட்டம் நடத்த அனுமதி கொடுக்க முடியாது என மிரட்டியது. மிரட்டல்களால் நம்மை அடக்கமுடியாது என்பதை நிர்வாகத்திடம் சென்னை தொலைபேசி மாநிலச் சங்கம் அழுத்தமாக கூறியது.

இந்த தர்ணாவில் அடக்குமுறைகளை எதிர்த்து உணர்வுபூர்வமாக 600க்கும் மேற்பட்ட தோழர்கள் எழுச்சியுடன் கலந்து கொண்டனர். பெருமளவில் தர்ணா அரங்கைச் சுற்றி காவல் துறை அதிகாரிகள் இருந்தார்கள். மாநில நிர்வாகத்தின் செயல்பாட்டை கண்டித்து தர்ணா துவங்கியது. இந்த தர்ணா போராட்டத்திற்கு சென்னை தொலைபேசி மாநில தலைவர் தோழர் M.கன்னியப்பன் தலைமை தாங்கினார். தோழர் K.சீனிவாசன், மாநில பொருளர் தமிழ் மாநிலம், வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்த தர்ணா போராட்டத்தில் சென்னைக்கு வந்திருந்த நமது பொதுச் செயலரை கலந்து கொள்ள இரு மாநிலச் சங்கங்களும் வேண்டுகோள் விடுத்தது. அதனை ஏற்று பல்வேறு சிரமங்களுக்கிடையில் நமது பொதுச்

செயலர் தோழர் P.அபிமன்யு கலந்து கொண்டு சொசைட்டியில் நடைபெறும் உறுப்பினர் விரோத, நடவடிக்கைகளை கண்டித்தும், ஊழலை அம்பலப்படுத்தி நடவடிக்கைக்கு உட்படுத்துவோம் எனவும் எச்சரிக்கை விடுத்தார். மேலும் இந்த தர்ணாவில் தோழர் S.செல்லப்பா,AGS, தோழர் R.ரவீந்திரன், முன்னாள் பொதுச் செயலர் (SEWA BSNL), தோழர் A.பாபுராதா கிருஷ்ணன் CS தமிழ் மாநிலம், தோழர் K.கோவிந்தராஜ் CS, சென்னை தொலைபேசி, தோழர் A.சுகுமார், CS (SEWA BSNL) சென்னை தொலைபேசி, தோழர் S.அன்புமணி முன்னாள் இயக்குநர், தோழர் S.மணி, முன்னாள் சொசைட்டி உதவி தலைவர், தோழர் S.பாஷா முன்னாள் இயக்குநர் ஆகியோர் எழுச்சி மிகு கண்டன உரை ஆற்றினார்கள்.

சொசைட்டி தலைமை செயலரிடம் நமது தலைவர்கள் கோரிக்கை மனுவை அளித்து உடனடி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினார்கள்.

சொசைட்டி உறுப்பினர்களின் இரத்தத்தை உறிஞ்சி ஊதாரி செலவுகள் செய்வதையும் ஊழல்கள் செய்வதையும் அனுமதிக்க முடியாது என அனைத்து தலைவர்களும் பலத்த கரகோஷத்திற்கிடையில் கண்டன உரையை நிகழ்த்தினர். வட்டி குறைப்பதும், நிலத்தை பிரித்து கொடுப்பது உள்ளிட்ட நமது நியாயமான கோரிக்கைகளை சொசைட்டி நிர்வாகம் தீர்த்துவைக்கும் என நம்புகிறோம். பிரச்சனை தீரவில்லை எனில் நமது போராட்டம் தொடரும். இந்த சிறப்பு மிகு தர்ணாவை தோழர் N.பஞ்சாட்சரம் மாநில உதவி செயலர், சென்னை தொலைபேசி நன்றி கூறி முடித்து வைத்தார்.

## நெஞ்சு நிறை பாராட்டுக்கள்

தமிழகத்திலிருந்து கோவை, ஈரோடு, கடலூர், பாண்டிச்சேரி, வேலூர், தருமபுரி, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, CGM அலுவலக மாவட்டம், CGM Project மாவட்டம் ஆகியவற்றிலிருந்து நூற்றுக்கணக்கில் தோழர்கள் உணர்வுபூர்வமாக கலந்து கொண்டதை தமிழ் மாநிலச் சங்கம் பாராட்டுகிறது. அதே போல் சென்னை தொலைபேசியிலிருந்து (செங்கல்பட்டு மாவட்டம் உட்பட) ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டதையும் தமிழ் மாநிலச் சங்கம் பாரட்டுகிறது.

தோழமையுடன்

**(A.பாபுராதா கிருஷ்ணன்)**
மாநிலச் செயலர்